# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6 8 0 |
| 6 மாதம் | ரூ. 3 4 0 |

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
இரா. இளஞ்செழியன், B.A. (Hons).

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

| வாள் | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1982 தை 28 | வீச்சு |
|---|---|---|
| 4 | 10—2—51 சனிக்கிழமை | 23 |


## பாதை தவறிவிட்டனர் பாரதபுத்திரர்கள்!




## பார்த்து மனந் பதறுகிறார் பண்டித நேரு!

Best copy available.

தொடர் நாடகம்.

# திலோத்தமா

(கு. தனபாலன்.)

## அங்கம்: 15

இடம்: வீட்டையடுத்த வீதி

[அருணன் இன்னும் வரவில்லை என்ற நினைப்பில் ராஜகுருவும் கருநாகனும் உரையாடுகின்றனர்.]

ராஜ: பின்னால் ஆகவேண்டியதை நான் பார்த்துக் கொள்கின்றேன்! அதைப்பற்றி நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே.

கரு: ஸ்வாமி, எனக்கென்னவோ சந்தேகமாகவே இருக்கின்றது.

ராஜ: எதைப்பற்றி?

கரு: அந்த அற்பப் பதர் அருணன் இன்னுமா வராமலிருப்பான்? இதில் ஏதோ மர்மம் அடங்கி இருக்கவேண்டும். எதற்கும் நாம்உள்ளே சென்று பார்ப்பது நல்லது!

ராஜ: ஆம், அதுவும் நல்ல யோசனைதான்.......எல்லோரும் சந்தடியின்றி வாருங்கள். இனி நேரமில்லை பேசிக்கொண்டிருக்க..........! [எல்லோரும் ஒளிந்து சென்று வீட்டை அணுகுகின்றனர்.]

## அங்கம்: 16

இடம்: ராஜகுருவால்ஏற்பாடு செய்யப்பட்ட மாடிவீடு.

திலோத்தமா: இனி நேரமில்லை பேசிக்கொண்டிருக்க.... என்னை இதோ இந்தக் கயிற்றால் கட்டிப்போட்டு, வாயில் துணியை அடைத்துவிட்டு பின்பக்க வழியாக ஓடி விடுங்கள்!

அருணன்: (அலட்சியமாக) ஏன்?

தி: தங்களைப் பிடிக்க என் தந்தை இன்று வலை பின்னி இருக்கின்றார். அதை நான் அறுத்து விட்டேன். அதோ அதுதான் அறுந்த வலையின் பாகம். (பின் பக்கவழியைச் சுட்டிக் காட்டுதல்) அந்த வழியாய்ச் செல்லுங்கள். அது உங்களை ஆபத்தினின்றும் காப்பாற்றும். சீக்கிரம்.......சீக்கிரம்.

அரு: (ஆச்சரியமுடன்) அப்படியா? திலோத்தமா! உனக்குமிக்க நன்றி. இதை நான் என் ஆயுள் உள்ளவரை மறக்க மாட்டேன்.......

[அருணன் திலோத்தமாவைக் கட்டிப்போட்டுவாயில்துணி அடைத்து விட்டு ஓடிவிடுகிறான்—சில வினாடிக்குள்ராஜகுருவும், அவனது ஆட்களும் அறைக்குள் பிரவேசிக்கின்றனர். தன் மகளின் நிலையைக் கண்டதும் கண் கலங்குகின்றார் ராஜகுரு.]

ஆல: ஆ.........என் மகள் திலோத்தமாவுக்கா இந்தக் கதி! டேய் மூடர்களே, சீக்கிரம் விடுவியுங்கள், அவளை! சீக்கிரம்... சீக்கிரம்!

[வீரர்கள் அவவிதமே செய்கின்றனர். திலோத்தமா மூர்ச்சையானது போல் பாசாங்கு செய்கிறாள். ஆலவாயர் பதைக்கின்றார்.]

ஆல: [கோபமாக] மகளே, உன்னை இந்தக் கதிக்காளாக்கின அயோக்கியனை நான் ஒரு போதும் தப்பவிடேன். அவன் தொலைந்த பின்புதான் நான் நிம்மதியடைவேன். கருநாகா அந்தக் கயவனை எப்படியாவது உயிருடன் என்முன் நிறுத்துவது உன் கடமை. பின்புதான் உன் முயற்சிக்குத் தகுந்த பரிசு நிர்ணயிக்கப்படும்! சரி, எல்லோரும் புறப்படுங்கள்!

கரு: ஸ்வாமி! உங்களது கருணை எனக்கிருக்கும்போது எனக்கென்ன குறை?

## அங்கம்: 17

இடம்: மந்திரியாரின் ஏகாந்த அறை.

[அருணன், தயாளன் என்னும் புனைபெயர் கொண்ட மாறுவேடத்துடன் மந்திரியாருடன் உரையாடுகின்றான்.]

அரு: உங்களது கருணை எனக்கிருக்கும்போது எனக்கென்ன குறை?

மணி: அருணா.......நீ நல்ல ராஜவிஸ்வாஸி மட்டுமல்ல....... மக்களின் செல்வாக்கும் நாட்டுப் பற்றும் ஒருங்கே அமையப் பெற்றவன் என்ற ஒரே எண்ணத்தினால் தான் நான் இந்தப் பணியை உன்னிடம் ஒப்படைத்தேன். உன்னிடம் அன்று அரசர் தந்த மோதிரம் இருக்கின்றதல்லவா?

அரு: (பையிலிருந்து எடுத்து) இதோ இருக்கின்றது.

மணி: சரி உனக்கு ஏதாகிலும் உதவி வேண்டுமானால் அதைக் காட்டி சாதித்துக்கொள். எதுவேண்டுமானாலும் இம் முல்லை நாட்டில் அது தேடித்தரும். வெற்றி தோல்வி எல்லாம் உன் உழைப்பில்தான் இருக்கின்றது. இதை என்றும் மறந்துவிடாதே!

அரு: நீங்கள் நம்பலாம் என்னை. நான் வருகிறேன். இனி அவ் விஷயத்தைப் பற்றிக் கவலையே படவேண்டாம்!

## அங்கம்: 18

இடம்: சேனாதிபதி கருநாகன் அறை.

[கருநாகன்—அருணன்—திலோத்தமா]

கரு: இனி அவ்விஷயத்தைப்பற்றிக் கவலையே படவேண்டாம். நான் கவனித்துக் கொள்ளுகின்றேன். முல்லைநாடே மண்டியிடும் உன் உதடசைந்தால்! என்னமோ, என்மீது மட்டும் நீ தயவுவைத்தால் போதும்.

தி: உன்மீது எப்போதே தயவு வைத்து விட்டேனே. இனிமேல் தாங்கள் என்னை மறந்தாலும் நான் உங்கள் உயிர் போகும் வரை மறக்கவே மாட்டேன்! (சிரிப்பு)

கரு: (ஆச்சரியமுடன்) உண்மையாகவா? திலோத்தமா நாம்.........

தி: சுய அறிவோடு தான் உரையாடுகின்றோம். அதிருக்கட்டும......கருநாகரே, பாவம் தயாளன் (அருணன்) ஓர் பித்துக்குளி. தத்துபித்தென்று சமயா சந்தர்ப்பங்கள் தெரியாது ஏதாவது உளறிவிட்டால் தயவு செய்து கோபித்துக் கொள்ள வேண்டாம். மற்றொன்று......

கரு: [ஆவலுடன்] என்ன அது?

தி: இது என் தந்தைக்குத் துளியும் தெரியக்கூடாது.

கரு: எது......நம்ம ரெண்டு பேரும்.......

தி: [போலி நாணமுடன்] ஆ...மா,..ம்!

கரு: அட, நீ ஒன்றும் பயப்படாதே திலோத்தமா..!

தி: எல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம் நான் வரட்டுமா?

கரு: இதற்குள்ளாகவா?

தி: அடா டாடாடா...... இந்த ஆண்களுக்கு இருக்கிற அவசர புத்தி எந்த ஜந்துக்குமே இடையாது போலிருக்கே......!

[கருநாகன் இளித்தல், திலோத்தமா அருணனுக்குக் கண் சாடை செய்துவிட்டு சாகஸமாய்ப் போய்விடுதல்.]

கரு: டேய், உன் பெயரென்ன?

அரு: தயாளன்

கரு: [கேலியாக] பெயரனவிலா அல்லது உண்மையிலேயா?

அரு: ஹிஹி.... ஹி ...கூடுமான வரையிலே அப்படித் தாங்க!

கரு: சரி, நீ நன்றாக சண்டை செய்வாயா?

அரு: இந்த கத்தி மாட்டியிருக்கிறதாலே கேக்கிறீங்களா? இது அழகுக்கு தானே பிரபு மாட்டிக்கிறது.

கரு: [சிரித்தல்] சபாஷ்! சரியானபேர்வழிடா நீ! [கோரச் சிரிப்பு] இப்பேர்ப்பட்ட அப்பாவி நமக்கு இருப்பதும் ஒரு விதத்தில் நல்லதுதான்!

## அங்கம்: 19

இடம்: ராஜகுருவின் அரண்மனை.

[கருநாகன், ராஜகுரு ஆலவாயர், அருணன்]

ஆல: [கேலிச் சிரிப்பு] இப்பேர்ப்பட்ட அப்பாவி நமக்கிருப்பதும் ஒரு விதத்தில் நல்லதுதான்!

கரு: அப்போதுதானே நாம் நமது வேலையைத் தடங்கலின்றிக் கவனிக்க முடியும்!

ஆல: அதுபோகட்டும்...... என்ன, அந்தப் பரதேசிப்பயல் அகப்பட்டானா?

கரு: எந்தப் பரதேசிப் பயல்........? அந்த அருணனையா சொல்லுகின்றீர்கள். அவன் எனக்கு எம்மாத்திரம்? நேற்று முளைத்த சுண்டைக்காய் பிள்ளைப் பூச்சி.......! கிள்ளி எறிந்துவிட மாட்டேனா அவன் தலையை!

ஆல: கருநாகா...அலட்சியத்தால் ஆபத்தை அணைத்துக் கொள்ளப் போகின்றாய். பத்திரம் எதிலும் ஜாக்கிரதையாய் இருப்பது நல்லது. ஏனென்றால் ஏற்கனவே மக்கள், நம்மால் போடப்பட்ட வரிகளாலும், அடக்குமுறை சட்டங்களினாலும் கொதிப்புண்டு கிடக்கின்றார்கள். இந்த சமயத்தில் நாம் அவன் மீது பகிரங்கமாகக் கை வைத்தால் நம்மீது பாய்வார்கள் ஆத்திரமாக இந்த அறிவு கெட்ட ஜனங்கள்! ஆகவே அவன் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால் நாம் தந்திரத்தைத் தான் கையாள வேண்டும்.

கரு: எப்படி ஸ்வாமி?

ஆல: முதலில் நாம் அவனது தகப்பனைத் தந்திரமாகப் பிடித்துக் கொண்டு வந்து விட வேண்டும்!

கரு: 'அது வெகு சுலபம்... பின்பு...?

(14-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை

# காதற் பறவைகள்!

[ ச. நாசராசன் ]

"ஆறுமுகம்! ஆறுமுகம்!"

"ஏனம்மா!"

"அப்பா ஊரிலிருந்துவர நாளாகுமா?"

"இல்லையே! இரண்டு தினங்களிலேயே வந்திடுவதாகத்தானே சொல்லிட்டுப் போனாங்க."

"சரி, இங்கே வா."

"ஏம்மா!"

"அந்த விளக்கை வைத்துவிட்டு வாயேன்."

"விளக்கு தொடைக்கணும் சீக்கிரம் வேலையைச் சொல்லுங்க."

"ஆறுமுகம்! இந்த பத்திரிகைகளையெல்லாம் ஒழுங்காகத் தேதிவாரியாக அடுக்கித் தருகிறாயா? வேண்டுமானால் நானும் கூடவே இருந்து உனக்கு உதவி செய்கிறேன்."

"ஏம்மா! இதையெல்லாம் கடையில் போடுவதற்குத்தானே? அதற்கு ஏன் அடுக்கணும்? சும்மா கட்டி......"

"அட கடையில் போடுகிறதற்கு இல்லையப்பா—அதில் ஒரு தொடர் கதை இருக்கிறது. அது ஒரு நல்ல கதை. அதற்காக அடுக்கச் சொன்னால்......"

"ஓ! அப்படியா? அப்ப நீங்க அந்தக் கதையைப் படித்த பிறகு, நானும் படிக்கக் கொடுக்கின்றீர்களா?"

"ம்! நான் மட்டிலுமா அதைப் படிக்கப்போகிறேன்?"

"சரி அவசரமாக அடுக்குவோம். நேரமாகிவிட்டது. விளக்கு தொடைக்கணும்."

"ஆறுமுகம்! நீ விளக்கைத் துலக்க அவாவுறுகின்றாயே தவிர உன் மனத்தைத் துலக்க விழைவு கொள்ளவில்லையே? வீட்டையும் வீட்டிலுள்ள பொருள்களையும் அழகுபடச் செய்கிறாய். ஆனால் உன்னையும் உன் உடைகளையும் அழகுற வைத்துக்கொள்ள எண்ணவும் மறுக்கிறாய்."

"ஆம்! அம்மா, நானோ ஒரு வேலைக்காரன். சதா உழைப்பன் உணவுக்காக! உல்லாசமாக வாழ அல்ல. நான் எப்படி என்னை அழகுபடுத்திக்கொள்ள முடியும்?"

"ஆறுமுகம்! நீ விரும்பினால்..."

"அம்மா! ஆசையா கிடையாது? காசைத்தானே காணோம்."

"ஆறுமுகம்! இந்தா! ம்!"

"ஐய்யா! வேண்டாம் அம்மா. அதுவும் திருட்டுத் தனமாகவா?"

"இல்லை ஆறுமுகம், நான்தானே கொடுக்கிறேன்."

"என் சம்பளத்தில் கழித்துக் கொள்ளுகிறீர்களா?"

"இல்லை, எனதன்பளிப்பு."

"வேண்டாம் அம்மா! வேண்டாம் அம்மா!"

"வைத்துக்கொள் ஆறுமுகம் நான் யாரிடமும் சொல்லமாட்டேன்.

"ஐயையோ! வேண்டாம்மா யாராவது பார்த்தால்—என் கையை விட்டுவிடுங்கள்......நீங்கள் — என் எஜமானி......"

"நான் பணம் கொடுத்ததை யாரிடமும் சொல்லிவிடாதே."

"அம்......மா...கதை....எனக்...கும்"

இதை எண்ணிப் பார்த்ததுமே ஆறுமுகத்தின் மனதில் ஒரு பயம். வாழ்நாளில ஒரு காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி. மனத்திரையில் பட ஓட்டம். எந்த நிலையில்? எந்த நேரத்தில்? இதைநினைக்கவும் அவன் மனம் கூசும். கையே அணையாக, கருங்கல்லே பாயாக, கட்டமைந்த நான்கு சுவர்களே பள்ளி அறையாக இருக்கும் நிலையில். அதுவும் கண்ணிலுள் பாவை பயந்து, தன்னைப் பத்திரப் படுத்திக்கொள்ள இமைத் திரையின் பின் ஒளிய முயற்சிக்கும்பொழுது. எண்ணம்-பின் கொட்டாவி-நினைவற்ற உடல்.

* * * *

"கதை சொல்லுகிறேன் கேட்கிறாயா?"

"கதை இருக்கட்டும். ஐயா வர வர திட்ட ஆரம்பிச்சுட்டாங்க அம்மா."

"செல்லமாக இருக்கலாம்"

"இல்லை! வேலைக்காரனுக்கு வெள்ளைச் சட்டை; கூலிக்கு வேலை—குதிகால் மறைய வேட்டி. கிராப்—கோணல் வாகுடன்...... இன்னும் என்னென்னவோ...... சதா சந்தேகம்......"

"சரி! இப்படி உட்கார்! கதையைப் படிக்கலாம்!"

"சும்மா இப்படியே நிற்கிறேனுங்க."

"......உட்கார் ஆறுமுகம்!"

"அம்மா, இப்படியெல்லாம் நீங்கள் செய்யக் கூடாது."

'ஆறுமுகம்'

'அம்.........'

'ஆறு......'

'அம்...மா...'

'ஆறு...முகம்...'

"அம்மா! அம்மா! ம்கூம்! போதும். வேண்டாம்!"

"நடுங்காதே உட்கார் ஆறுமுகம்."

"அம்மா! நீங்கள் உயர்ந்த குலத்தவர் என்று உலகத்தாரால் போற்றப் படுபவர்."

"நீங்கள் ஏற்றுக் கொண்டதால்."

"நானோ வருணாசிரமப் பட்டியலின் இறுதியைச் சேர்ந்தவன்!"

"மாற்ற மன உரம் ஏற்படாததால்"

"நீங்களோ பணக்காரர்"

"ஏழைகளை உறிஞ்சியதால்"

"நானோ ஏழை"

"கோழையாய் இருப்பதால்"

"மலைக்கும் மடுவுக்கும் சமத்துவமா?"

"காட்டாறு ஒன்று கரைபுரண்டு வரின்."

"சொல்லில்."

"இல்லை! செயலில்."

"அம்மா! சமூகம் தூற்றும்."

"அதை நாம் ஏற்றுக்கொண்டால்தானே?"

"நாம் கூடி வாழ முடியாதே."

"ஏன்? எங்காவது......"

"வீட்டை விட்டா?"

"ஏன்? குலம் குடும்பம், சமூகம், தேவைப்பட்டால் நாட்டையே

13-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1981 தை 28 | வீச்சு |
|---|---|---|
| 4 | 10—2—51 சனிக்கிழமை | 23 |


## "சென்றேன்! கண்டேன்"!

"சென்றேன்! கண்டேன்!"—மட்டற்ற மகிழ்ச்சியுடன் இயம்புகிறார்!

"சென்றேன்! கண்டேன்!"—அளவற்ற ஆச்சரியத்துடன் பேசுகிறார்!

"சென்றேன்! கண்டேன்!"—சொல்லிச் சொல்லிப் பூரிப்படைகிறார்!

"சென்றேன்! கண்டேன்!"—மீண்டும் மீண்டும் கூறுகிறார்!

சென்றாராம்! கண்டாராம்! ஆனந்தத்தோடு ஒரு முறை கூறுகிறார்! ஆச்சரியத்தோடு மற்றோர் முறை கூறுகிறார்! ஆர்வத்தோடு ஒருதரம் இயம்புகிறார்! ஆயாசத்தோடு மற்றோர்தரம் இயம்புகிறார்! மகிழ்ச்சி மன்னனாக ஒளி வீசிய வண்ணம் ஒருமுறை பேசுகிறார்! துயரத்தின் தூதுவனாக இருந்த வண்ணம் மற்றோர் முறை பேசுகிறார்!

சென்றாராம்! கண்டாராம்! நாம் செல்லவில்லை அவர் சென்ற இடத்துக்கு! நாம் காணவுமில்லை அவர் கண்ட காட்சிகளை! எனவேதான் செல்லாத நமக்கு, சென்றுவந்த அவர், நாம் காணாத காட்சியினை, அவர் கண்டுவந்த வண்ணம் தீட்டிக் காட்டுகிறார்.

சென்றார்! கண்டார்! இப்போது இங்கே, வந்தார்! சொல்கிறார்!

எங்கே சென்றார்? தெரியவேண்டுமா? இங்கிலாந்துக்கு?

எதைக்கண்டார்? அறிய விருப்பமா? அமைச்சர்களை!

இங்கிலாந்துக்குச் சென்றார்! அமைச்சர்களைக் கண்டார்!

இப்போது, இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கிறார்! எனவே நம்மிடம் கூறுகிறார்!

போயும் போயும் அமைச்சர்களைக் காண்பதற்காகத்தானா கப்பலேறிக் கடல்கடந்து அக்கரைச் சீமைக்குப் போனார் அற்புத சித்தர்-நூற்றுக் கணக்கான அமைச்சர்கள் இந்த இந்தியாவிலேயே உலவுகிறார்களே—இங்கேயே அமைச்சர்களைப் பார்த்திருக்கலாமே எளிதாக—அமைச்சர்கள் என்றால் எப்படி இருப்பார்கள், அவர்களுடைய புன்சிரிப்பும் சிடுசிடுப்பும் எப்படி எப்படி இருக்கும் என்பதையெல்லாம் இங்கிருந்து கொண்டே தெரிந்துகொண்டிருக்கலாமே—இந்தப் பூணாரம் பூண்ட புதுமையைக் காண்பதற்காக இவர் பூலோகத்தின் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிக்குச் சென்றிருக்கத் தேவையில்லையே என்றெல்லாம் கூறத் தோன்றும் உங்களுக்கு 'அவர் இங்கிலாந்துக்குச் சென்றார் அமைச்சர்களைக் கண்டார்' என்ற வாசகத்தைக் கண்ணுற்றதும்!

உங்களுக்கு மட்டுமா, யாருக்குமே அப்படித்தான் கூறத்தோன்றும்! இருந்திருந்து அமைச்சர்களைப் பார்ப்பதற்குத்தானா ஒருவர் ஆறாயிரம் மைல் தாண்டிச் செல்லவேண்டும் என்றுதான் எவரும் கேட்பர்!

ஆனால் அவர் கூறுகிறார், "அந்த நாட்டு அமைச்சர்கள் வேறு! இந்த நாட்டு அமைச்சர்கள் வேறு! அவர்களிடம் இவர்கள் சென்று ஆயிரமாயிரம் பாடங்களைக் கற்றுக் கொண்டாக வேண்டும்" என்று.

அவர் பேசியிருக்கிறார், சென்னையில், சென்ற மாதம்:

"நான் சில மாதங்களுக்கு முன்னால் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தேன். அப்போது, அந்த நாட்டு அமைச்சர்கள் அங்கே எப்படிப் பவனி வருகிறார்கள் என்பதை மிக்க ஆவலுடன் கவனித்தேன். நான் கூறினால் நீங்கள் நம்பமாட்டீர்கள்! அந்த நாட்டில் அமைச்சர்கள் பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது, இந்த நாட்டில் எதிர்க்கட்சிக்காரர்கள் எந்த நிலையிலிருந்து மேடைப் பேச்சை நிகழ்த்துகிறார்களோ அதே நிலையிலிருந்து கொண்டுதான் நிகழ்த்துகிறார்கள். அதாவது, அந்த அமைச்சர்கள் பேசுகிற போது, அவர்களைச் சுற்றிப் போலீஸ்காரர்கள் பாரா போட்டுக்கொண்டு நிற்பதே கிடையாது. அந்த அமைச்சர்களும் போலீஸ்காரர்கள் தங்களைச் சுற்றி நின்றுகொண்டு பாரா கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுவதே கிடையாது. பொது மக்களின் பலமான ஆதரவைத்தான் அவர்கள் தங்களுக்கு இருக்கவேண்டிய பொருத்தமான பாதுகாப்பு என்று கருதுகிறார்கள்—போலீஸ்காரர்களின் அதிகாரப் பாதுகாப்பை அணுவளவும் அவர்கள் விரும்புவதில்லை. பிரிட்டிஷ் முதலமைச்சர் மிஸ்டர் அட்லி ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார்—நேரில் பார்த்தேன் — அவரைச் சுற்றியோ அவருக்கு அருகிலோ போலீஸ் ஆர்ப்பாட்டம் தனியளவும் இல்லை."

சென்று கண்ட இச் செய்தியினைச் செப்புகின்ற அளவோடு நின்றுவிட்டாரா "சென்றேன் கண்டேன்!" என்றவர்! இல்லை! "வந்தேன்—பார்த்தேன்" என்று வேறு பேசுகிறார்!

சென்று கண்டபிறகு, வந்து பார்த்தாராம் அவர்!

எதை?

கூறுகிறார் கேளுங்கள்!

"இங்கிலாந்துக்குச் சென்ற போது அங்கிருக்கும் அமைச்சர்கள், மக்கள் மன்றத்தில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அச்சமின்றி உலவிடும் அற்புதக்காட்சியைக் கண்டேன் அல்லவா, அப்படிக் கண்டதுமுதல், இங்கிருக்கும் அமைச்சர்கள் இந்த

நாட்டில் எப்படி உலவுகிறார்கள் என்பதையும் கண்டறியவேண்டும் என்ற ஆவல் என்னைப் பிடர்பிடித்து உந்தியது.

"இந்தியாவுக்குத் திரும்பியதும் இங்கிருக்கும் அமைச்சர்கள் பொது மக்களிடையே உலவும் பரிதாபக் காட்சியைக் கண்டேன்—மனம் பதறிவிட்டேன்!

"பொதுமக்களிடையே பவனி வருகிறபோது எந்த விநாடியில் தங்கள் உயிர் எப்படிப் பறிக்கப் பட்டுவிடுமோ என்ற பயத்தால் பிடிக்கப்பட்ட பரிதாபச் சித்திரங்களாகவே காட்சி தருகிறார்கள் நம் நாட்டு அமைச்சர்கள்.

"சென்ற வாரம், டில்லியிலிருந்து சென்னைக்கு வந்திருந்தாரே கைத்தொழில் அமைச்சர் ஹரிகிருஷ்ணமேதாப், அவர் எப்படி உலவினார்—கவனப்படுத்திப் பாருங்கள்! ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படை முன்னே செல்ல, போலீஸ் படையொன்றும் இராணுவ அணிவகுப் பொன்றும் பின்னே பாதுகாப்பு அளித்து வர, இந்த முக்கூட்டுப் படைகளுக்கு நடுவே அமைச்சர் மட்டற்ற பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்ட மாபெரும் புதுமை கண்ணெதிரே தோன்றும்!

"நீங்களே சொல்லுங்கள்! போலீஸ் படையினராலும் இராணுவ அணுவகுப்பினராலும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது அமைச்சரின் உயிர் என்று சொல்லாமற் சொல்வதுபோல் இல்லையா அமைச்சர் அன்று உலவிய காட்சி?

" அங்கே, இங்கிலாந்தில், எப்படி அச்சமின்றி உலவுகின்றார்கள் அமைச்சர்கள்—அந்தக் காட்சியை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

"இங்கே, இந்தியாவில், எப்படி அஞ்சி அஞ்சி உலவுகிறார்கள் ஆளவந்தார்கள் — இந்தக் காட்சியை மறுகணம் எண்ணிப் பாருங்கள்.

"பிறகு கூறுங்கள், இந்தியா, இங்கிலாந்திட மிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளமாக இருக்கின்றனவா, இல்லையா?"

கேட்கிறார் அவர்—இல்லை என்று தைரியமாக யார்தான் முன்வந்து கூறமுடியும்?

**சென்றார்! கண்டார்!**

சென்று, கண்டதோடு இல்லை!

**வந்தார்! பார்த்தார்!**

வந்து பார்த்ததோடாவது நின்றுவிட்டாரா? கிடையாது!

**பேசினார்! விளக்கினார்!**

பேசி விளக்கியதோடு போதும் என்ற திருப்தி பெற்றுவிட்டாரா? அதுவும் இல்லை!

**கேட்கிறார்! கடாவுகிறார்!**

யார் அவர்?

சென்று, கண்டு, வந்து, பார்த்து, பேசி, விளக்கி, கேட்டுக் கடாவுகிறாரே இவ்வளவு தைரியமாக, எவர் இவர்?

யார்? தெரியவில்லையா?

காசா சுப்பாராவ்—ஸ்வதந்த்ரா என்ற வாயில் நுழையா விசித்திரப் பெயர் படைத்த ஆங்கில ஏட்டின் அற்புதமான ஆசிரியர்—ஆரியர்!

ஆரியர்தான்—ஆனாலும் உண்மை பேசியிருக்கிறார்!!

ஆச்சரியம்—ஆனால் கற்பனையல்ல—நாட்டு நிகழ்ச்சி!

—+—

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனுங்களை புடிச்சி சிறையிலே போட்டுட்டா இதுங்கசும்மாவா இருந்திடும்?

தயா: நம்ம தாலியையே கொத்தோட அறுத்திட மாட்டாங்களா?

கரு: டேய், உனக்கிருக்கிற முன் யோசனை கூட அந்த ராஜ குருவுக்கு இல்லையேடா!

தயா: அப்படின்னா, ராஜ குரு வேலையை நான்கூட பார்க்கலாம்!

கரு: நீ மட்டுமென்னடா, கொஞ்சம் ஊரை ஏமாத்தத் தெரிஞ்சவன் எவனும் அந்த உத்தியோகத்தைத் தாராளமா பார்க்கலாம்! ஹூம்......வா போவோம். என்ன செய்வது!

[எல்லோரும் போகிறார்கள்—அருணன் தன்திட்டம் பலித்ததை எண்ணிப் பரவசமுடன் செல்கிறான்] (தொடரும்)


## சிறந்த சிந்தனைக்கருவூலங்கள்

**இளஞ்செழியன் இயற்றியது**

ரூ. அ.

சரிந்த சாம்ராஜ்யம் 0 10

மாவீரன் சிவாஜியை ஆரியகுரு கக்குபட்டர் ஆட்டிப்படைத்த அக்கிரமத்தை விளக்கிக் கூறும் அழகிய நூல்.

**இராதாமணாளன் இயற்றியவை**

இளவரசி 1 8

செந்தமிழருக்கேற்ற செங்கரும்புச் சோலை. ஆரிய சூழ்ச்சிக்கும் தமிழர் வீரத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தை இனிது விளக்கும் சிந்தனை ஓவியம்.

மூடுபனி 1 0

சமூகத்திடையே பரவிக்கிடக்கும் அறியாமை மூடுபனியை அறிவுக் கதிர் கொண்டு அகற்றும் அரிய நவீனம்.

பாலைவனம் 0 10

எழிலும் சுவையும் ததும்பும் எழுத்தோவியம். உண்ண உண்ணத் தெவிட்டாத் தமிழ்நடை.

| | | |
|---|---|---|
| மனப்புயல் | 1 | 8 |
| பொற்சிலை | 1 | 0 |
| இன்பக் கனவு | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| மயானத்தில் முத்தம் | 0 | 8 |
| பெண் | 0 | 8 |
| ருஷ்ய நாட்டழகி | 0 | 8 |
| மதம் அவசியமா | 0 | 3 |
| அய்யோ கடவுளே | 0 | 3 |

**ஆசைத்தம்பி இயற்றியவை**

| | | |
|---|---|---|
| இருண்ட வாழ்வு | 0 | 14 |
| வறண்ட வாழ்க்கை | 0 | 8 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 |
| ஆண்களை நம்பலாமா | 0 | 3 |
| கொலைகாரி | 0 | 12 |

**தில்லைவில்லாளன்**

| | | |
|---|---|---|
| அவள் | 0 | 8 |
| கோயில் பெருச்சாளிகள் | 0 | 6 |
| கழுதை ஊர்வலம் | 0 | 8 |
| அத்திப் பூக்கள் | 0 | 12 |

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு, சென்னை 1

# மூன்று செய்திகள்—ஒரு கேள்வி!

## 1

"எதற்கெடுத்தாலும் ஆட்சியாளர்களைக் குறைசொல்கிற மனப்போக்கு நாட்டில் தழைத்தோங்கி இருக்கிறது. இது கூடாது. மக்கள் மன்றம் ஆட்சிப் பீடத்தாருடன் ஒத்துழைக்க வேண்டுமேதவிர அவர்களைக் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டுவிடக்கூடாது."

—ஈரோட்டில் காமராஜர் சொற்பொழிவு

## 2

"நான் அண்மையிம் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்த போது, சிற்றூர்களில் உணவுப் பங்கீட்டுமுறை எடுக்கப்பட்டுவிட்ட பிறகு, பல இடங்களில், அரிசி, பட்டணம் படி ரூபா இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலைக்குக்கூட விற்கப்படுகிற கொடுமையைக் கண்டு மனம் பதறலானேன். அரிசி படி விலை ரூபா 2 0 0 என்றால் ஏழை மக்கள் எப்படி நலமாக வாழமுடியும்? அவர்கள் வாழ்விலே இன்பம் எப்படி எக்களிக்க முடியும்?"

—பெருந்துறைப் பொதுக் கூட்டத்தில் காமராஜர்

## 3

"ஆட்சியாளர்களால், லோயர் எலிமெண்டரி கிரேட் (Lower Elementary Grade) ஆசிரியர்களுக்குத் தரப்படும் சம்பள உதவித்தொகை ஜனவரி முதல் தேதி முதல் மாதம் ரூ 18-0-0 லிருந்து மாதம் ரூ 20 0 0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுபோலவே, செகண்டரி கிரேட் (Secondary Grade) ஆசிரியர்களுக்குத் தரப்படும் தொகையும் மாதம் ரூ 35 0 0 லிருந்து மாதம் ரூ 37 0 0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது."

—சென்னை ஆட்சியாளர்களின் அறிக்கை

சென்னை "மெயில்" இதழின் ஒரு நாள் ஏட்டிலே ஒரே பக்கத்தில் வெளிவந்துள்ள மூன்று தனித்தனி செய்திகள் இவை.

இந்தச் செய்தித் துணுக்குகள் மூன்றினையும் மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள்.

ஆட்சியாளர்களை எடுத்ததற்கெல்லாம் குறை சொல்கிற மனப்போக்கு நாட்டில் வேகமாக வளர்ந்து வருகிறது, இது கூடாது என்று அதிகாரத் தோரணையில் பேசுகிறார் காமராஜர் முதல் செய்தியில்!

படி அரிசி விலை ரூபா இரண்டு என்கிறார்கள் பல இடங்களில்! இப்படி இருந்தால் அரிசிவிலை, நாட்டில் எப்படித்தான் வாழமுடியும் ஏழைகள் நலமாக என்று கேட்டு வேதனை விருத்தம் வாசிக்கிறார் அதே காமராஜர் இரண்டாவது செய்தியில்!

ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளமாக, இதுவரை மாதம் ரூ 18 பெற்றிருந்த குழுவினருக்கு இனி ரூ 20-ம், இதுவரை மாதம ரூ 35 பெற்றிருந்த சாராருக்கு இனி ரூ 37ம் அளிக்கப்படும் என்று ஆனந்த வெண்பா வாசிக்கிறது ஆட்சியாளர்கள் அறிக்கை, மூன்றாவது செய்தியில்!

இந்த மூன்று செய்திகளையும் ஒரு கண நேரம் ஒன்றாக இணைத்து வைத்துப் பாருங்கள்—உங்களுக்குப் பல உண்மைகள் புலனாகும்.

ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளம் ரூ 18!

படி அரிசி விலை ரூபா 2 0 0

ஆட்சியாளர்களை குறையே சொல்லக்கூடாது!

வேடிக்கையாக, வேடிக்கையாக மட்டுமல்ல, விபரீதமாக, விபரீதமாக மட்டுமல்ல, விசித்திரமாகவுங் கூட இல்லையா காங்கிரஸ் தலைவர் காமராஜர் நாட்டு மக்களை நோக்கி நயந்தளித்திருக்கும் கருத்துரைக் கொத்து?

காமராஜர் கனிவுடன் கூறுகிறார் படி அரிசி விலை ரூபா இரண்டாக இருந்தால் எப்படி வாழ முடியும் ஏழைகள் இன்பமாக என்று!

ஆனால் அவரே கூறுகிறார் வேறோர் இடத்தில், அல்லும் பகலும் ஆட்சியாளர்களைக் குறை கூறுவது அணுவளவும் பொருத்தமற்ற அற்பத்தனமான செயல் என்று.

படி அரிசி விலை ரூபா 2! ஆனாலும். ஆட்சியாளர்களைக் குறை கூறக் கூடாது!

கூறுகிறார் காமராஜர்!

எப்படி முடியும் குறைகூறாமல் இருக்க? ஏன் இருக்கவேண்டும் குறை கூறாமல்?

அரிசி, மக்களின் அன்றன்றுட உணவுப்பொருள்.

அரிசி, தென்னாட்டவரின் ஜீவநாடியான தானியம்.

அரிசி, ஏழைமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்.

அரிசிப் பொருளின் விலை ஏறினால் ஏழைமக்களின் இன்பம் குறைகிறது என்று அர்த்தம்,

அரிசிப் பொருளின் விலை குறைந்தால் ஏழைமக்களின் இன்பம் அதிகமாகிறது என்று அர்த்தம்.

அரிசியின் விலையை உயர்த்துவதும் தாழ்த்துவதும் ஆட்சியாளர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒரு செயல்.

ஆட்சியாளர்கள் தகுந்த முறையில் திட்டமிட்டு, சரியான வழியில் பாடுபட்டால் அரிசியின் விலையை நிச்சயமாகக் குறைக்க முடியும்.

எனவே அரிசி விலை நாட்டிலே பல இடங்களிலே படி ரூபா இரண்டு என்ற பயங்கரமான உயரத்தை எட்டிப் பிடித்துவிட்டது என்றால்—அப்படிப்பட்ட சங்கடமான விலையின் காரணமாக சஞ்சல பூமியில் சஞ்சரிக்கும் நிலை ஏழைமக்களுக்கு ஏற்பட்டுவிட்டதென்றால்—அப்படி ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கை, இருளும் இடரும் நிறைந்ததாக மாறிவிட்டது என்றால், இவற்றிற்கெல்லாம் காரணம் ஆளவந்தார்களின் அலட்சியப் போக்கு அல்லது திறமைக் குறைவு தான் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

ஆரம்ப ஆசிரியர்களின் மாத ஊதியம் ரூபா இருபதாம்! அதுவும் இப்போது ஆளவந்தார்கள் பெரிய மனது வைத்து கூட்டிக் கொடுத்திருக்கிற ரூபா இரண்டையும் சேர்த்துத்தான் அந்த சம்பளம்!

(12-ம் பக்கம் பார்க்க)

# ★ தூக்கில் தொங்கினாள் மருமகள்! வி[illegible]றி விற்கப்பட்டான் பேரப்பிள்ளை! ★

## மாயமாய் ம[illegible]ந்தான் மகன்! வதைபட்டுக் கிட[illegible]ருர் வயோதிகர்!

### உள்ளத்தை உருக்[illegible]ண்மை நிகழ்ச்சி!

### பசியை அடக்[illegible]யங்கொட்டை

### பச்சைக் குழந்தை[illegible] பத்து ரூபாய்!

### முன்ஷிஜி அ[illegible]துரைகள்!

சேலம் நகரம்! டிசம்பர் மாதம்! ஒரு நாள் காலை!

வீதி வழியே நெசவுத் தொழிலாளி ஒருவன் வேகமாக நடந்து செல்கிறான்!

நெசவுத் தொழிலாளி ஒருவன் நடந்து செல்கிறான் என்று கூறுவதைவிட, எலும்புக்கூடு ஒன்று விரைந்துபோகிறது என்று இயம்புவதுதான் அதிகப் பொருத்தமாக இருக்கும்.

உண்மையிலேயே அந்தப் பரிதாபத்திற்குரிய பாட்டாளித் தோழனின் உருவம், காட்சிக்கு இனிமை தரும் கருத்துள்ள ஓவியமாக இல்லை! என்புதோல் போர்த்த கரப்புக் கூடாகத்தான் இருந்தது.

கண்களிலே நீர்! முகத்திலே வேதனை! உள்ளத்திலோ, துயரக் கடல்! உடலிலோ, ஊரெங்கும் தாண்டவமாடும் உணவுப் பஞ்சத்தின் கோர நடனம்!

இது, அவன் நிலை! இந்த நிலையிலேதான் அவன் நடந்து கொண்டிருக்கிறான்!

கடை வீதிக்கு வருகிறான்! வந்ததும் நிற்கிறான்! கண்களை நாலாபுறமும் திருப்புகிறான்! அப்படியும் இப்படியும் பார்க்கிறான்! எதையோ ஒன்றை அல்லது ஏதோ ஓர் இடத்தை மிகுந்த ஆவலுடன் தேடுபவன்போல அங்கும் இங்கும் நோக்குகிறான்!

திடீரென்று அவன் கண்களுக்கு, சற்றுத் தொலைவில், ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில், ஒரு சிறு கூடையில் கொஞ்சம் புளியங் கொட்டைகளைக் கொட்டி வைத்துக்கொண்டு "புளியங் கொட்டை ஐயா புளியங் கொட்டை" என்று கூவிக்கொண்டிருக்கும் மெல்லிய சிறிய உருவம் ஒன்று தென்படுகிறது.

அந்த உருவத்தைத்தான் அவன் கண்கள் இதுவரை தேடிக்கொண்டிருந்தன போல் தெரிகிறது! ஆமாம்—அப்படித்தான் என்று கூறுவதைப் போலிருக்கிறது அவன், அந்த "வியாபாரி"யை நோக்கி வேகமாகச் செல்லும் காட்சி!

புளியங் கொட்டை வியாபாரி! அவன் எதிரே, வாடி வதங்கிப்போயிருக்கும் அந்த நெசவாளி! இருவருக்குமிடையே ஒரு பண்டமாற்று! சிறிதுநேர பேரத்திற்குப்பிறகு நெசவாளியிடமிருந்த ஒரு சேலை, வியாபாரியின் கரத்திற்கு மாறுகிறது. வியாபாரியிடமிருந்து கொஞ்சம் புளியங்கொட்டை நெசவாளியின் மேல் துணியில் முடியப்படுகிறது.

"வியாபாரம்" முடிந்தது!

வந்த வழியே திரும்புகிறான் நெசவாளி!

புளியங் கொட்டையை எதற்காக வாங்கியிருக்கிறான் அப் பாட்டாளி?

அவன் நெசவாளியாயிற்றே—நெசவுத் தொழிலுக்குப் 'பசை' தேவையாயிற்றே—அந்தப் பசையைத் தயாரிப்பதற்கா?

இருக்காது!

வெறும் பசை உற்பத்திக்குத்தான் அந்தப் புளியங் கொட்டை என்றால் அதனை வாங்கியவுடனே அவன் முகத்தில் அன்றலர்ந்த தாமரை யென ஆனந்தம் இந்த அளவுக்கு மலர முடியாதே! கண்களிலும் களிப்பு ஒளி இந்த அளவு கூத்தாடாதே!

ஆமாம்—அவன் புளியங் கொட்டையை இவ்வளவு அவசர அவசரமாக வாங்கிக்கொண்டு இத்துணை ஆனந்தத்துடன் நடந்து செல்வதற்கு வேறு ஏதோ ஒரு காரணம் இருந்தாக வேண்டும்.

இதோ, யாருடனோ பேசுகிறான் அந் நெசவாளி! என்ன பேசுகிறான்? பார்ப்போமே!

"அடடே! நீயா? எங்கேயப்பா போய்விட்டு வருகிறாய்?"

"அந்த வெட்கக் கேட்டை ஏனப்பா கேட்கிறாய்? புளியங்கொட்டை வாங்கிக் கொண்டு வருகிறேன்!"

"புளியங் கொட்டையா? ஏன்?"

"ஏனா? சமைத்துச் சாப்பிட! சென்ற நான்கு நாட்களாக எங்கள் வீட்டில் எல்லோரும் பட்டினியப்பா! என்ன செய்வது? கையிலும் பணமில்லை—தப்பித் தவறிப் பணம் இருந்து விட்டால் கடையில் அரிசி இல்லை! அந்த வயிற்றெரிச்சலை ஏனப்பா கிளப்புகிறாய்! பிறகு பார்க்கிறேன்—நான் போய் வரட்டுமா? கொஞ்சம் அவசரம்! வீட்டில் மனைவி பட்டினியால் துடித்துக் கொண்டிருப்பாள்!"

வெடுக்கென்று உரையாடலை முடித்துவிட்டு வேக வேகமாகத் தன் வீடுநோக்கி நடக்கிறான் விசாரமே உருவான அந் நெசவாளி!

அடிக்கொருமுறை தன் புளியங் கொட்டை முடிச்சைத் தொட்டுப் பார்க்கிறான்—வீட்டில், பசியோ பசி என அலறித் துடித்துக் கொண்டிருக்கும் தன் மனைவியின் பரிதாபத்தை நினைக்கிறான்—இந்த "உணவு," அந்த அம்மையின் வேதனையைக் குறைக்கும் அல்லவா என்ற எண்ணம் எழுகிறது அவன் உள்ளத்தில்—நெஞ்செல்லாம் பூரித்துப் போகிறான்!

சென்ற நான்கு நாட்களாக முழுப் பட்டினி! அதற்கு முன்போ எத்தனையோ நாட்கள் அரைப் பட்டினி! முழு உணவை அவன் கண்டோ ஆண்டுகள் மூன்றுக்குமேல் ஆகிவிட்டன! இந் நிலையில் நீந்திக் கொண்டிருக்கும் அந் நெசவாளிக்கு இப்போது கிடைத்திருப்பது கொஞ்சம் புளியங்கொட்டைதான் என்றாலும், அந்தப் புளியங்கொட்டையும் அவனுக்குத் "தேவாமிர்தமாக" இனிப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

வீட்டைக் கவ்விக்கொண்டிருக்கும் வேதனை இருளை இன்று ஒருநாள் மட்டும் விலக்கப் போதுமான உணவு கிடைத்துவிட்டது என்ற எண்ண அலைகளில் மிதந்த வண்ணம் தன் வீட்டுக்கு அருகே வந்துவிட்டான் அப் பாட்டாளித் தோழன்!

நிமிர்ந்து பார்த்தான்! தன் வீட்டுத் தெருக்கதவு உட்புறமாகத் தாளிடப்பட்டிருந்தது!

தட்டினான்—கதவு திறக்கப்படவில்லை!

மீண்டும் தட்டினான்—மீண்டும் மீண்டும் தட்டினான். முதலில் மெதுவாக—பிறகு சற்றுப் பலமாக—அதன்பிறகோ தடதடவென்றுகூட தட்டிப் பார்த்தான். எப்படித் தட்டியும் கதவு திறக்கப்படவில்லை.

தன் மனைவியின் பெயரைச் செல்லமாக அழைத்துத் திறக்கச் சொன்னான் ஒருமுறை! கோபத்துடன் கூவி, ஆத்திரத்துடன் ஏசித் திறக்கச் சொன்னான் மறுமுறை!

என்றாலும் கதவு மூடியது மூடியபடிதான் இருந்தது. உள்ளே, மனைவி இருக்கிறாள் என்பதற்கான அடையாளமே தெரியவில்லை.

இதற்குள் ஒரு கும்பலே கூடிவிட்டது அந் நெசவாளியைச் சுற்றி!

"எங்கே போயிருப்பார்கள் அந்த அம்மையார்?"

"அவர்கள் எங்கும் போகிற வழக்கமில்லையே!"

"தெருக் கதவைத் தாண்டி அவர்கள் வெளியே வந்தே நாம் பார்த்ததில்லையே!"

"ஒருக்கால் வெளியே போயிருந்தால்?"

"எப்படியப்பா போகமுடியும்? கதவு உட்புறமாக அல்லவா தாளிடப்பட்டிருக்கிறது?"

"ஒருவேளை பின்புறக் கதவு வழியாகப் போயிருந்தால்...?"

"பின்புறக் கதவே கிடையாதே இவ்வீட்டிற்கு!"

"அப்படியானால் அவர்கள் உள்ளேதான் இருக்க வேண்டும்!"

"உள்ளே இருந்தால் இவ்வளவு அமர்க்களத்திற்கு நடுவே எப்படியப்பா வெளியே வராமல் இருப்பார்கள்!"

"எனக்கென்னவோ எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறது."

"எனக்குந்தான்."

"எனக்குக்கூடத்தான்."

"கதவை உடைத்துப் பார்த்தால் என்ன?"

"ஆமாம், அதுதான் சரி! கதவை உடைக்கவேண்டியதுதான்."

நெசவாளியைச் சுற்றிக் கூடியிருந்த மக்கள் மன்றத்தில் நிகழ்ந்த உரையாடல் துணுக்குகள் இவை.

கதவு, கடைசியில், உண்மையாகவே உடைத்துத்தான் எறியப்பட்டது.

நெசவாளியும் பிறரும் தடதடவென்று உள்ளே நுழைந்தனர்.

அடுத்த விநாடி, நெசவாளியைத் தவிர, ஏனையோரெல்லாம் மெதுவாக வெளியே வந்துவிட்டனர்.

அவர்கள் ஒவ்வொருவர் கண்களும் கண்ணீர்க் கடலாகிவிட்டன.

துக்கம் அனைவரின் தொண்டையையும் அடைத்துவிட்டது.

சோகபிம்பமாகிவிட்டனர் ஒவ்வொருவரும்.

உள்ளே, நெசவாளியின் மனைவி, பிணமாகத் தொங்கிக்கொண்டிருந்தாள், தற்கொலை செய்துகொண்ட காரணத்தால்!

பக்கத்தே நின்றுகொண்டு, அம்மா அம்மா என்று கூவி அலறி அழுதுகொண்டிருந்தது அந்த அம்மையாரின் அருமைக் குழந்தை!

போனவர் திரும்பாத இடத்திற்குப் போய்விட்டாள் தன் அன்னை என்பது தெரியாது அச் சின்னஞ்சிறு முல்லை மொக்குக்கு! எனவே தான் அது கதறிக் கதறிக் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தது!

மனைவி, பிணமாக!

குழந்தை, கண்ணீர்க் கடலாக!

கண்டான் நெசவாளி இக் காட்சியை! கண்டதும், கதறி அழுதானா? இல்லை! துடித்துத் தேம்பினானா? கிடையாது! "அந்தோ மகனே—இனி யாரையடா நீ அம்மா என்றழைப்பாய்?" என்று சோகக் குரலாலே தன் சொர்ணபிம்பத்தைப் பார்த்துச் சொற்களை நடமாடவிட்டானா? கிடையாது! கட்டிய மனைவியையும் காப்பாற்றக் கதியற்ற கயவனானேனே என்று சொல்லிச் சொல்லிப் புலம்பினானா—இல்லை! இல்லவே இல்லை!

கண்ணீர் விடவில்லை—கதறி அழவில்லை—அந்தோ என அரற்றவில்லை—மனைவியே மாண்டாயோ என்று புலம்பவில்லை—தாங்கரிய துக்கத்தால், சில விநாடி, சிலையாக நின்றுவிட்டான்!

துயரம், சிறிதளவினதாக இருக்குமானால், அது, சொற்கள் எனும் வடிவம்கொண்டு நடமாடுவது வழக்கம்.

துயரம், பெரிய அளவினதாக இருக்குமானால், அது, கண்ணீர் எனும் உருவம் பூண்டு காட்சி தருவது வாடிக்கை.

ஆனால், துயரம், கட்டுக்கு அடங்காததாக—தாங்குதற்கு முடியாததாக—எத்தகு எல்லைக்கும் பிடிபடாததாக—மிகமிக அதிகமானதாக இருக்குமானால், அந்நிலையில், அது, சொற்கள் எனும் வடிவமும் பூண்பதில்லை—கண்ணீர் எனும் உருவமும் அடைவதில்லை—தன்னைத் தாங்கிய மனிதர்களைக் கற்சிலையாக ஆக்கிவிடுவதுதான் அதன் வழக்கம்.

சேலத்து நெசவாளி, தன் வானத்து வெண்ணிலவு, பிணமாகத் தொங்கக் கண்டும், புலம்பவும் தோன்றாமல், கதறவும் அறியாமல், சிலையாக நின்ற காரணம் அதுதான்.

வினாடிகள் சில சென்றன—சிலை நிலை கலைந்தது—திடீரென்று எழுந்தான் நெசவாளி—என்ன எண்ணினானோ தெரியவில்லை—குழந்தையைத் தோளிலே தூக்கிக்கொண்டான்—தடதடவென வீதிவழியே நடந்தான்—பிள்ளையோ பிள்ளை என்று கூவி விற்றான் குழந்தையை—யாரோ ஒருவர்—அவருக்கு சொந்தக் குழந்தை இலலாத சஞ்சலம் அதிகம் போலும்—பத்து ரூபாயை எண்ணிக் கொடுத்துப் பிள்ளையை விலைக்கு வாங்கிக்கொண்டார்.

பத்து ரூபாயை இடுப்பில் சொருகிக்கொண்ட நெசவாளி சிட்டுபோற் பறந்துபோனான்! எந்த இடத்திற்கு என்கிறீர்களா? யாருக்குத் தெரியும்?

"என்னாங்க இங்கே இருக்கிறீங்க? உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதா?"

"என்னப்பா என்ன நடந்தது? ஏதாவது விபரீதமா? சொல்லு சீக்கிரம்!"

"நான் எதைன்னு சொல்வேனுங்க? நீங்க உத்தமோத்தமரு ஒருத்தருக்கும் தீங்கு நினைக்காதவரு! உங்களுக்கா இப்படி வரணும்? ஐயோ! சொல்லவே வாய் வரல்லிங்களே!"

"நடந்தது என்ன தம்பி—அதைச் சொல்லாம சும்மா பேசறியே—என்னதான் நடந்தது"

"அந்தக் கூத்தை ஏன் கேக்கறீங்க! உங்க மருமவ, நீங்களும் இல்லாம, உங்க பிள்ளையும் வெளியே போயிருந்த இந்த நேரமாப் பாத்து, தூக்குப் போட்டுகிட்டுதுங்க. உங்க பிள்ளை வந்ததும் இந்தக் கோராமையைப் பார்த்துட்டு, மனம் தாளாம, குழந்தையையும் தூக்கிக்கிட்டு எங்கியோ போய் மறைஞ்சிட்டாருங்க........."

மனைவியை இழந்து. குழந்தையையும் விற்றுவிட்டு, எங்கோ சென்று மறைந்துபோன நெசவாளியின் தகப்பனார்—தள்ளாடும் முதியவர்—தொண்டுகிழவர்—அவர், தன் இல்லத்தில் நடைபெற்றிருக்கும் இவ்வளவு விபரீதங்களையும் அறியாமல், ஊருக்குவெளியே ஏதோ ஓர் இடத்தில் சுருண்டுகிடந்தார், பசிக்கொடுமை தாளாமல்!

நெசவாளியின் நண்பர் ஒருவர் கிழவனாரிடம் சென்று சேதியைச் சொன்னதும் வெந்த புண்ணில் வேலிட்ட நிலை பெற்றார் பெரியவர்.

தேம்பினார், அழுதார், புலம்பினார், கதறினார், ஐயகோ என அரற்றினார், ஓடோடி வந்தார் வீட்டிற்கு. மருமகளைக் கண்டார் பிணமான நிலையில், பதறிப் பதறிக் கலங்கிக் கண்ணீர் விட்டு விம்மினார், எப்படியோ ஒருவாறு மனம் தேறி, மருமகளை அடக்கம் செய்தார்.

பிறகு, தன் பேரனை, மகன், பத்து ரூபாய்க்கு விற்றுவிட்ட விபரீதத்தை அறிந்து நெஞ்செல்லாம் புண்ணாகி, கையிலொரு பத்து ரூபாயை வைத்துக் கொண்டு தேடித் தேடி அலைகிறார் தன் பேரப்பிள்ளையை வாங்கிய புண்ணியவான் எங்கே எங்கே என்று.

உள்ளத்தை உருக்கும் இந்த உண்மை நிகழ்ச்சி, சேலம் நகரில், டிசம்பர் இறுதியில் நடைபெற்றிருக்கிறது.

**மருமகள் தூக்குப் போட்டுக் கொண்டு மாண்டு போனாள்.**

**மகன், அந்தத் துக்கம் தாளாமல் ஊரைவிட்டே மறைந்துபோனான்.**

**பேரன், நேரைம் பத்து வெள்ளி பொற்காசுகளுக்காக விற்கப்பட்டு விட்டான்.**

**மருமகள்—மகன்—பேரன்—மூவரையும் பறிகொடுத்து விட்டுப் பரிதாபத்தின் உருவமாக நடமாடுகிறார் முதியவர்.**

ஒரு கணம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்திப் பாருங்கள் இந்த வேதனைக் காட்சியை! உள்ளம் வேகும்; கண்கள் குளமாகும்! குருதி கொதிக்கும்—நரம்புகள் துடிக்கும்!

வேதனை! வேதனை! தமிழ் நெஞ்சங்களால் தாங்க முடியாத வேதனை, இந்தக் காட்சி!

"வந்தவர்க்கெல்லாம் இல்லை என்னாது, வாரி இறைத்த தமிழ் நாடு" என்று கீதம் பாடுகிறார்கள் புலவர்கள்—ஆனால் அப்படி வாரி இறைத்ததால்தானோ என்னவோ, இப்போது, இந்த நாட்டுச் சொந்தக்காரர்களே உணவின்றித் தவித்துத் தூக்கிட்டுக் கொண்டு மாளவேண்டிய மாபெரும் கொடுமை உருவாகியிருக்கிறது.

"கவிதைகள் காவியம் உயர்கலைகள், உளம் கவர்ந்திடும் சிற்பமும் சிறந்தனவாம், குவிகின்ற பொன் பொருள் செந்நெல் எலாம் இங்குக் குறையிலவாம் என்று ஆடுவமே!" என்கிறார்கள் அனைத்தும் உணர்ந்தவர்கள். ஆனால் ஆடிப்பாடி மகிழத் தோன்றவில்லை நாட்டிலே நடமாடும் உணவுக் கொடுமையைக் கண்டால்! கூடி உட்கார்ந்து முழுறி அழத்தான் தோன்றுகிறது!

"அகிலம் தேக்கும் அழியாக் குன்றம், அழகாய் முத்துக் குவியும் கடல்கள், முகிலும் செந்நெல்லும் முழங்கு நன்செய், முல்லைக்காடு மணக்கும் நாடு, நம் நாடு" என்று எழில்மிகு தமிழொலி எழுந்திடக் காணும்போது இன்பம் நம் உள்ளத்தை வாரி அணைத்து முத்தமிடத்தான் செய்கிறது. ஆனால், "சேலம்" நம் முன்னால் வந்து நிற்கிறபோதோ, அந்த இன்பம் மறைந்து, எழில் தேய்ந்து, களிப்பு கரைந்து, துயரம் ஒன்றுதான் நம் நெஞ்சைத் துளைக்கத் தொடங்குகிறது.

எவ்வளவு எழில் கொழிக்கும் இன்ப நிலையம், தமிழ் நாடு!

அத்தகு நாட்டில், எவ்வளவு கொடுமை நிறைந்த கோராமை நடைபெற்றிருக்கிறது 'சேலம்' பகுதியில்!

பொன் விளைந்த பூமியாம் இது—கூறுகிறார்கள் பெரியவர்கள்—பொன் இங்கே விளைந்தது உண்மையோ இல்லையோ, இன்று, இங்கே பஞ்சம் விளைகிறது, பட்டினி விளைகிறது, வேதனை விளைகிறது, விபரீதம் விளைகிறது, இவை அத்தனையையும் விளைவிக்கும் உணவுப் பற்றுக்குறை விளைகிறது. இவை மட்டும் உண்மை.

நாட்டிலே உணவுப் பஞ்சம் இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவு மூண்டிருக்கிறது இப்போது.

இதை யாரும் மறுக்கமுடியாது—மறுக்கவிடாது சேலம் சம்பவம்—மறுப்பதும் இல்லை யாரும்.

நான்கைந்து மாதங்களுக்கு முன்வரை, "ஊராள வந்த உத்தமர்கள்" மட்டும் மறுத்து வந்தார்கள் இந்த உணவுப் பஞ்ச உண்மையினை.

ஆனால் இப்போதோ அவர்கள் கூட மறுப்பதில்லை. அவர்களால் கூட மறுக்கமுடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டது பற்றாக்குறைப் பஞ்சம்.

"பஞ்சம் பஞ்சம் என்பதெல்லாம் வெறும் புரளி!"

"எதிர்க்கட்சி ஏடுகள் கட்டிவிடும் சரடு"

"வேறு வேலையற்ற வீணர்களின் விபரீதப் பிரசாரம்!"

"தேசத் துரோகிகளின் வழக்கமான விளையாட்டு!"

"இல்லாத பஞ்சத்தை இருப்பதாகக் கூறுவது வேண்டாத விபரீதத்தை வீணாக வரவேற்கும் விசித்திர மனப்பான்மையின் வேடிக்கையான விளைவு."

ஊர் மக்களை வாட்டும் உணவுப் பஞ்சத்தைப்பற்றி எடுத்துக் கூறும் துணிவு பெற்ற எழுத்தாளர்களை, முன்னரெல்லாம், அமைச்சர் பீடத்திலே அமர்ந்திருக்கும் அற்புத சித்தர்கள், இப்படியெல்லாம்தான் பேசி ஏசுவது வழக்கம்.

ஆனால், இப்போதோ?

அவர்கள் சுருதி குறைந்து விட்டது!

"பஞ்சம் இருப்பது உண்மைதான்!"

"பல இடங்களில் பங்கீட்டு முறை முறிந்துபோய் விட்டது என்பது எங்களுக்கும் தெரியும் தான்!"

"எத்தனையோ ஊர்களில், பல நாட்கள், பங்கீட்டு அரிசி வழங்கப்படவேயில்லை—வாஸ்தவம்தான்."

"என்னதான் செய்வது நாங்கள்—எவ்வளவோ முயன்று பார்த்தோம்—எப்படியோ பஞ்சம் வந்துவிட்டது."

"தொடர்ந்தாற்போல் நான்கு ஆண்டுகள் மழை இல்லாவிட்டால் யார்தான் என்ன செய்ய முடியும்?"

"உணவு மிகமிகக் குறைவாகத்தான் கிடைக்கிறது—என்ன செய்வது — பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்."

"அடுத்த நான்கைந்து மாதங்கள் நமக்குக் கஷ்டகாலமாகத்தான் இருக்கும்—ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் யாரும்."

இப்படி மாறியிருக்கிறது அமைச்சர்களின் பேச்சு வண்டி இப்போது!

எத்தனை ஆயிரம்பேர் எத்தனைக் கோடி ஆதாரங்களைக் காட்டினாலும் சரியே, உணவு நிலைமை உள்ளத்தை மருட்டும் அளவு வளர்ந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன் என்று உரத்த குரலில் உலகெங்கும் கேட்கும்படி முழக்கமிட்ட அதே டில்லி அமைச்சர் தோழர் முன்ஷி, இப்போது, "அடுத்த ஆறு மாதங்கள் நெருக்கடிக் காலம்தான் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை, மறுக்கவும் விரும்பவில்லை" என்று பேசத் தொடங்கிவிட்டார்.

சென்னை மாகாணத்தின் உணவு நிலை இப்போது மிக நெருக்கடியான கட்டத்தில் கிடந்து தவிக்கிறது!—"சேலம் சம்பவம்", நமக்குத் தெரிவிக்கும் முக்கியமான தகவல் இது.

"இப்போது மட்டுமல்ல, அடுத்த ஆறுமாத காலமும் நெருக்கடியான காலம்தான்" என்கிறார் டில்லி உணவமைச்சர் "ஸ்ரீஜத்" முன்ஷிஜி!

"ஆமாம்! அன்பர் முன்ஷி கூறுவது அவ்வளவும் உண்மைதான்!" என்று கூறுவதுபோல் அமைந்துள்ளன சென்னை உணவமைச்சர் தோழர் ரோச் விக்டோரியா தந்துள்ள சில புள்ளிவிவரங்கள்.

அமைச்சர் விக்டோரியா சென்னை மேல் சபையில் அளித்துள்ள தகவல்படி, சென்னை மாகாணத்தில் உற்பத்தியாவதுபோக, மேற்கொண்டு சென்னை மாகாணத்திற்கு, ஓராண்டு காலத்திற்குத் தேவைப்படும் உணவுப்பொருளின் அளவு—13½ லட்சம் டன்.

ஆனால், டில்லி ஆளவந்தார்கள், அளவற்ற கருணை கொண்டு, சென்னை மாகாணத்திற்குத் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கும் உணவுப் பொருளின் தொகை—இதவும் அமைச்சர் விக்டோரியா தந்துள்ள தகவல் தான் — கவனமாகப் படியுங்கள் — 4 லட்சம் டன்.

| | |
|---|---|
| நம் தேவை | 13½ லட்சம் டன் |
| அவர்கள் தர இசைவது | 4 லட்சம் டன் |

நமக்குத் தேவைப்படும் அளவில் மூன்றில் ஒரு பங்கு உணவுப் பொருளைக்கூட நமக்குத் தர மனம் இசையவில்லை டில்லி ஆட்சியாளர்கட்கு!

13½ கேட்கிறார்கள் நம் ஆட்சியாளர்கள். ஆனால் 4-தான் தர இயலும் என்கிறார்கள் டில்லி ஆளவந்தார்கள்.

அக்கிரமம் என்பீர்கள்.

அநீதி என்பீர்கள்.

தவறான போக்கு என்பீர்கள்.

கூடாத திட்டம் என்பீர்கள்.

நீங்கள் எதைக் கூறினால் என்ன—டில்லி உங்களை என்ன மதிக்கவா போகிறது—உங்களை மதிக்கும் உயர்பண்பு இருக்குமானால், டில்லி, 13½ கேட்ட உங்களுக்கு 4 தானா தரும் ?

டில்லி அமைச்சர் "ஸ்ரீஜத்" முன்ஷிஜி சென்னைக்கு வந்திருந்தாரல்லவா அண்மையில், அப்போது சென்னை அமைச்சர்கள், அவரிடம், நான்கு லட்சம் டன் கொஞ்சமும் போதாது என்று தெரிவித்துக் கொண்டனராம். அதற்கு விடையாக ஸ்ரீஜத் முன்ஷிஜி திருவாய் மலர்ந்தருளியுள்ள திவ்யப் பிரபந்தம் என்ன தெரியுமா? இதோ பாருங்கள் அந்த ஆத்திச்சூடியை!

"உங்களுக்கு 4 லட்சம் டன் தருவதென்று நாங்கள் முடிவு செய்திருப்பதே நீங்கள் மகா அதிர்ஷ்டசாலிகள் என்பதைக் காட்டுகிறது. அந்த 4 லட்சம் டன்னும் உண்மையாகவே உங்களிடம் வந்து சேர்ந்து விட்டாலோ, உங்களைவிட அதிர்ஷ்டசாலிகள் வேறு யாருமே கிடையாது என்பதை நீங்கள் திண்ணமாக நம்பலாம்."

இது, முன்ஷி மூதுரை!

குமாரசாமியார் ஆட்சி கேட்டிருப்பது 13½ லட்சம்! ஜவகர்லால் ஆட்சி தர இசைந்திருப்பது 4 லட்சம்! ஆனால் அற்புத சித்தர் முன்ஷியார் கூறுகிறார் அது கூட வந்து சேர்வது கடினம் என்று!

டில்லி இவ்வளவு திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது நான்கு லட்சம் டன்தான் தரமுடியும் என்று

நம் தேவையோ $13\frac{1}{2}$ லட்சம் டன்! டில்லி தர இருப்பதோ 4 லட்சம் டன்! மிச்சம் தேவைப்படும் $9\frac{1}{2}$ லட்சம் டன்னை எங்கிருந்து தேடப்போகிறார்கள் சென்னை ஆட்சியாளர்கள—அதுதான் நமக்குத் தெரியவில்லை—நமக்கு மட்டுமா—ஆட்சியாளர்கட்குக்கூட அதுதான் தெரியவில்லை.

பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால் என்ன என்று கேட்பீர்கள் நீங்கள்.

செய்யலாம் இறக்குமதி — நிச்சயமாகச் செய்யலாம்— ஆனல் இறக்குமதி செய்வதற்கான அதிகாரம் சென்னை அமைச்சர்களிடம் இல்லை, டில்லி அமைச்சர்களிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது.

"சென்னை மாகாண மக்களுக்கு எவ்வளவு சோறு போட்டால்போதும்?"—இதை நிர்ணயிக்கும் உரிமை, அமைச்சர் விக்டோரியாவிடம் இல்லை, கனம் முன்ஷியிடம் இருக்கிறது. தோழர் குமாரசாமியாரிடம் இல்லை—பண்டிட் ஜவகர்லாலிடம் இருக்கிறது.

சென்னை ஆட்சிமன்றத்தில் அல்ல, டில்லி தர்பாரிலே முடிவு செய்யப்படவேண்டிய பிரச்சினை உணவு இறக்குமதி.

சென்னை மாகாண மக்கள், உணவின்றித் தவித்துப் பட்டினி ஊர்வலம் வந்தால், சென்னை அமைச்சர் விக்டோரியா, துடிக்கலாம்; பதறலாம்; கண்ணீர் சிந்தலாம்; அனுதாபம் காட்டலாம்; ஆனல் ஒரு குண்டுமணி நெல்லைக்கூட, அவரால், பிற நாடுகளிலிருந்து கொண்டுவர முடியாது. காரணம், அவருடைய கைகள் அந்த வகையாகக் கட்டப்பட்டுவிட்டன இந்திய அரசியல் திட்டத்தால்!

இறக்குமதி செய்வதற்கான அதிகாரம் டில்லி தர்பாருக்கு மட்டும்தான் உண்டு.

அந்தத் தர்பார் கூறுகிறது திட்டவட்டமாக நான்கு இலட்சம்தான் தரமுடியும் சென்னை மக்கட்கென்று.

மேற்கொண்டு $9\frac{1}{2}$ லட்சம் டன் உணவுப் பொருள் கிடைத்தாகவேண்டும் நமக்கு — அந்த உணவுப் பொருளைப் பிற நாடுகளிலிருந்து வாங்கும் உரிமையோ டில்லி ஆட்சியினருக்கு மட்டும்தான் இருக்கிறது.

எனவே, சென்னை ஆளவந்தார்கள, டில்லி ஆட்சிப் பீடத்தாரைப் பார்த்து, மேற்கொண்டு $9\frac{1}{2}$ லட்சத்தையும் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று வற்புறுத்தியாக வேண்டும். வற்புறுத்தல் பயன் தரவில்லையேல், டில்லி அமைச்சர்களின் இந்த ஆகாவழிப் போக்கைக் கண்டிக்கும் அற்குறியாக மந்திரி நாற்காலிகளைத் துச்சமென ஒதுக்கிவிட்டு வெளியே வந்தாக வேண்டும்.

அவ்வளவு வீரம்—துணிவு—தைரியம் உண்டா நம் அமைச்சர்களுக்கு?

"வற்புறுத்தல்—இல்லையேல் — வெளியேற்றம்"— இந்த இலட்சியப் பாதையில் நடந்துசெல்வதற்குத் தேவையான அஞ்சாமை ததும்புகிறதா நம் ஆளவந்தார்களின் நெஞ்சத்தில்?

அவர்களுடைய இறந்த கால, நிகழ்கால நடத்தைகள், இல்லை இல்லை என்றே முரசறைந்து தெரிவிக்கின்றன.

* * * *

தூக்கில் தொங்கிய மருமகள்
மாயமாய் மறைந்த மகன்
விலைக்கு விற்கப்பட்ட பேரன்
உதைபட்டுக் கிடக்கும் வயோதிகர்.

இவர்கள், இன்பத் திராவிடத்தைத் தேம்பவைக்கும் இன்றைய உணவுப் பஞ்சத்தின் அடையாளச் சின்னங்கள.

இத்தகு "சேலங்கள்" எதிர்காலத்திலேனும் ஏற்படாமல் இருக்குமா?

அமைச்சர் விக்டோரியா அளித்துள்ள அரிய புள்ளி விவரங்களை அளவுகோலாகக் கொண்டு பார்த்தால், அச்சமும் ஆயாசமும்தான் நமக்கு ஏற்படுகின்றன. நம்பிக்கையும் இன்பமும் நம்மை எட்டிப் பார்க்கவும் மறுக்கின்றன.

எதிர்காலம், இடரும் இருளும் நிறைந்ததாகத்தான் காணப்படுகிறது.

—

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் ஆரம்ப ஆசிரியர், மாதம் இருபது ரூபா சம்பளம் பெற்று, படி விலை ரூபா இரண்டு கொடுத்து அரிசி வாங்கி, இந்த விலை உயர்வைத் தடுத்திருக்க வேண்டிய—ஆனல் ஏனே தடுக்காமல் இருக்கிற ஆட்சியாளர்களைக் குறையும் சொல்லாமல் வாழ்வதென்றால் அது எப்படித்தான் முடியுமோ—அதுதான் நமக்குப் புரியவில்லை.

மாத ஊதியம் ரூபா 20
அரிசி விலை படி கு 2

ஆனலும் ஆட்யாளர்களைக் குறை சொல்லக் கூடாது!

முடியுமா?

காமராஜரே விடை, கூறட்டும்.

—


# "ஞாயிறு"

(மாதமிரு முறை)

ஆசிரியர்: A. K. வேலன்

இணை ஆசிரியர்:
தாமரைச் செல்வன்

தனிப்பிரதி விலை 3 அணா
ஆண்டு சந்தா (மலருடன்) ரூ. 5

விற்பனையாளர்கள் தேவை,

விவரங்கட்கு:—

'ஞாயிறு' பதிப்பகம்
கரந்தை தஞ்சை.



# போர்வாள்

★

## அடுத்த இதழ்

* முற்றிலும் கைத்தறி நெசவாளர் உலகக் கொந்தளிப்பைச் சித்தரிக்கும் சிறந்த கட்டுரைகள் கொண்டதாக விளங்கும்.

* சேலம்—அருப்புக் கோட்டை அறப்போர் பற்றிய விளக்கங்கள்.

* நூல் பஞ்சம் பற்றிய புள்ளி விவரங்கள்.

* கைத்தறிப் பிரச்சினை பற்றிய கருத்துரைகள்.

அத்தனையும் உண்டு அடுத்த இதழில்!

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

விட்டு......முடியாவிடில் கூட்டை விட்டாவது விடுதலை யடைய வேண்டியதுதான்."

"அம்மா! எனக்காகவா?."

"இல்லை நம் இருவருக்காகவும்! அந்த எழில் மிக்க சக்திக்காகவும்!"

"அம்மா! ஏதோ என் மனம் கலவரமடைகிறது. என்ன நேரிடப் போகிறதோ? எனக்கு மிக்க பயமாக இருக்கிறதே."

"ஆறுமுகம்!

"காதலடைதல் உயிரியற்கை!—அது கட்டில் அகப்படும் தன்மையதோ?
—அடி

சாதல் அடைதலும் காதலாலே—

என்று புரட்சிக்கவி கூறியுள்ளதை நீயறியாயா?"

"கேட்டிருக்கட்டும்; அம்மா! அந்த அலமாரி ஏன் திறந்து கிடக்கிறது? அதிலிருக்கும் மணிமுடி, வைரமணிமாலை, அகண்டதொரு காதணி இவைகள் எது?'—"எது? திருடன்!—திருடன்!"

"ச்சே! அவ்வளவும் கனவா?' விழித்தெழுந்த கைதியின் கேள்வி.

* * *

திருச்சி சிறைச்சாலையின் ஓர் அறையில் ஆறுமுகம், காலைக் கனவால் கலக்கமுற்று, கண்ணைக் கசக்கிக்கொண்டு, கதவண்டை சென்று, கம்பிகளின் இடுக்கு வழியாகக் கதிரவனின் உதயக் காட்சியைக் கண்ணுற்றான். ஆறுமுகம் கண்டது கனவல்ல என்று அவன் கூறினால், யாராவது நினைவு அல்லது நிகழ்ச்சி என்று ஒப்புக் கொள்ளுவார்களா? ஆனால், அவன் சிறை அறைப் படக்காட்சி சாலையில் உறக்கமென்னும் முதல் வகுப்பில் உட்கார்ந்துகொண்டு கனவு என்னும் திரையில் கண்டது அவன் வாழ்க்கையின் நிகழ்ச்சியில் கடைசிப் பகுதி. சிறைக்கு வருவதற்கு முந்திய நாள் நடந்த காட்சி.

இளங்கதிரவனின் அழகைப் பருகுவான். அதை மறைத்து மறைத்துச் செல்லும் கருமுகிலைக் காண்பான். கருங்குயில் ஒன்றை அதன் பெட்டைக் குயில் வரிக்க வந்திருப்பதை நோக்குவான். இரு குயில்களும் இன்பம் பருகுவதைக் காண்பான். கண்டதும் கையால் தன் மார்பை அழுத்திக்கொள்ளுவான். இன்னலான தன்னிலையை எண்ணுவான். பொன்னான தன் நாட்டைப் பற்றி எண்ணுவான். தன் நாட்டில் தான் சாதிக்கவிருந்த பெரியதொரு சாதனையைப் பற்றி எண்ணுவான்.

கைக்கு அந்தத் துரு ஏறிய கம்பி ஒரு பற்றுக் கோடாகக் கிடைத்தது போல் தன் எண்ணத்திற்குப் பற்றுக் கோடு ஒன்று கிடைக்கவில்லையே என்று எண்ணி ஏங்குவான். நல்லவன் நாட்டிலே நடமாட முடியாததை எண்ணி நகைப்பான்.

மக்கள் கூடுவதை நோக்குவான். மக்கள் கூட்டம் பெருகுவதை ஆறுமுகம் பலகணியின் வழியாகப் பார்த்தான். அப்பொழுதுதான் தன் உணர்வு பெற்றான். கைகால்களை உதறி சோம்பல் முறித்தான். அன்று ஒரே நாள்! இறுதி நாள்!! அவனுக்கு விடுதலை—அல்லது கடும் தண்டனை, கிடைக்கவேண்டிய கடைசி நாள்.

மறுபடியும் மனத்திரையில் படக்காட்சியின் ஓட்டம்—அந்த சீர்திருத்தப் பெண்ணுக்கும் தனக்கும் நடந்த சிறு உறவு பற்றி—ஆம்! அவள்தான் கடைசி சாட்சி. அதுவும் அன்றைய சாட்சி! தன் வாழ்வை வரையறுக்க இருப்பவை அவ்வனிதையின் வாய் வார்த்தைகள் தான் என்பதை எண்ணி ஏக்கமும் ஊக்கமும் கொள்வான். தான் அல்லது அவள் அப்பா இருவரில் அவள் யாரைப் பெரிதாக மதிக்கின்றாளோ? அப்பா — ஆறுமுகம். தொட்டுக்கொள்ளாத இருதுருவங்கள். இருப்பினும் உண்மையை மறைக்கமாட்டாள் என்பது அவன் மன உறுதி. ஆனால்......

நீதிமன்றப் பணியாள் 'செல்லமணி' என மும்முறை கூவினான். செல்லமணி! ஆம்! அவள்தான் ஆறுமுகத்தின் எஜமானரின் மகள்! ஏன்? ஆறுமுகத்திடம் அன்பு பாராட்டிய பாவை. அவள். நாராயணசாமி ஐயரின் ஒரே புதல்வி. செல்வமணி சாட்சிக் கூண்டில் ஏறினாள். எதிரே குற்றவாளிக் கூண்டு. அதில் ஆறுமுகம். ஈரிணைக் கண்களும் ஒரு கணம் சந்தித்தன. உலகம் சுற்றுவதைவிட வேகமாக சுற்றியது நீதி மன்றம். ஆறுமுகத்தின் காற்றுப்பை நிரப்பப்பட்டது. மார்பகம் சற்று முன் வந்து உள் சென்றது.

வழக்கு மன்றத்தின் முன் மக்கள் கூட்டம். இருவரும் மக்களைப் பார்க்கின்றனர். பராரி ஆறுமுகத்திற்கா அவ்வளவு கூட்டம்? இல்லை பெரிய கோவில் அர்ச்சகர்—அதனாலேயே பெருத்ததோர் பணக்காரர் ஆனவர். அந்தப் பணக்காரர் வீட்டுத் திருட்டு வழக்கல்லவா? அதுவும் அவர் வீட்டின் வேலையாளே திருடியது. அதனால் தான் அவ்வளவு கூட்டம்! அந்த வட்டாரத்தில் நாராயண சாமி ஐயரைத் தெரியாதவர் ஒருவரும் இரார். வழக்குத் தொடரும் என அறிவிக்கப் பட்டாகி விட்டது.

நீதிபதி :—உன்பெயரென்ன? உனக்கு இந்தத் திருடனை எவ்வளவு நாட்களாகத் தெரியும்.

செல்லமணி ;— (உறுதித் தோற்றத்துடன்) செல்லமணி. குற்றம் நிரூபிக்கப்படுமுன் திருடன் எனக் கூறுவது முறையல்ல. சிறக, ஆறுமுகத்தை 10–12 ஆண்டுகளாக எனக்குத் தெரியும்.

நீதிபதி :—(கோபத்துடன்) கேள்விக்கு மட்டும் பதில். ஆறுமுகத்தைக் கையும் களவுமாகப் பிடிக்கும்போது நீ பார்த்தாயா?

செல்லமணி :—இருவரையும் பார்த்தேன்.

நீதிபதி:—பின் ஏன் ஆறுமுகம் தன் குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுக்கிறான்?

செல்லமணி :— அது எனக்குத் தெரியாது. ஆனால், ஆறுமுகம் தான், குற்றவாளிதான் என்பதை ஒப்புக் கொண்டிருப்பானே.

நீதிபதி :— வழக்கு மன்றம் என்று அறியாமல் நீ பேசுகிறாய். அவ்வாறு பேசக் கூடாது. நேரடியான பதில் தேவை.

செல்லமணி:— உண்மையாகக் கூறுகிறேன்.

நீதிபதி:— இறுதியாகக் கேட்கிறேன். ஆறுமுகம் திருடனா? இல்லையா? இரண்டில் ஒன்று.

செல்லமணி:- (மௌனத்துடன் மக்கள் கூட்டத்தைப் பார்க்கிறாள்)

நீதிபதி:— ஏன் மௌனம்?

செல்லமணி:— (மேலும் மௌனம், தன் தந்தையைக் கூர்ந்து கவனிக்கிறாள்.)

நீதிபதி:— மன்றத்தை மதிக்க மறுக்கிறாய். உடனே பதில். அவன் திருடனா? இல்லையா?

செல்லமணி:— (பொறுமையின் குன்றன்ன மௌனம்.)

மௌனத்திடையே .........ஆதரவற்ற ஆறுமுகத்தின் பரந்த முகத்

16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆல: பின்பு என்ன....தகப்பனது உயிரை ஊசலாட்டி அவனை நாமிருக்குமிடத்திற்கு வரச்செய்ய வேண்டும்.

கரு: அற்புதம்....! அருமையான யோசனை! [இருவரும் சிரிக்கின்றனர்.]

அங்கம்: 20

இடம்: அரண்மனை நந்தவனம்.

[திலோத்தமா—காஞ்சனா—அருணன்]

காஞ்: அற்புதம்......! அருமையான யோசனை! திலோத்தமா, உன்னை வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டேன். எனக்காக, இம்முல்லை நாட்டுக்காக நீயும், என்னுருயிர் அன்பர் அருணரும் உழைப்பதை நான் என்றென்றும் மறவேன். தோழி......நான் உன்னை ஓர் உயிர்த் தெய்வமாக மதிக்கின்றேன். இல்லையென்றால் எனக்காக உன்னுயிர்க்குயிரான காதலைத் தியாகம் செய்வாயா? திலோத்தமா, நீ சேற்றில் செந்தாமரை! இரத்தவெறிகொண்ட வேங்கைக்குப் பிறக்கவேண்டிய மங்கையல்ல நீ. இம்முல்லைநாட்டிற்கே நல்லதோர் பாடத்தைப் போதிக்கும் தியாகச்சுடர் நீ! உன்னை என் தோழியாகப்பெற்றது என் பாக்கியம்தான்!

[தூரத்தில் அருணன் வருகிறான்]

தி: காஞ்சனா, என்னைப் புகழ்ந்தது போதும். மிகுதி உள்ளனெல்லாவற்றையும், அதோ வருகிறாரே அவரிடம் கொட்டிவிடு!

காஞ்: [நாணத்துடன்] குறும்புக்காரி....!

அரு: [சிரித்துக் கொண்டே வந்து] திலோத்தமா, எதைக் குறிப்பிடுகிறாய்?

தி: காஞ்சனா தேவியாரைக் கண்ணின் இமையைப் போல் காக்கவேண்டுமென்பது மந்திரியாரின் ஆணை. அம்மையாரின் இரு கண் இமைகளில் நானொருத்தி......!

காஞ்: மற்றொன்று......?

தி: அதுவா....இதோ நிற்கும் உன் வருங்கால வாழ்க்கைத் துணைவர்! (அருணனைக்காட்டி) [எல்லோரும் சிரித்தல்]

அரு: திலோத்தமா உன்னிடம் ஓர் முக்கிய சேதி சொல்ல வேண்டும்!

தி: என்ன அது?

அரு: துரோகக் குழி வெட்டி, சூழ்ச்சி வலையைப் பின்னியிருக்கின்றார்கள் சூதுக்காரர்கள்!

காஞ்: ஆ.......!

தி: தயவு செய்து தெளிவாகச் சொல்லுங்கள்!

அரு: உனது தந்தை ஆலவாயரும், துரோகி கருநாகனும் என் தந்தைக்கு முதலில் பின்னியிருக்கிறார்கள் சதிவலையை! அதன் பின்பு, முறையே நான், பிறகு மந்திரியார், முடிவில் காஞ்சனா.......!

காஞ்: என்ன துணிச்சல்! உண்ட வீட்டுக்கு ஊறுதேடும் உன்மத்தர்களை இச் சதிகாரத் தெய்வமும் விட்டு வைத்திருக்கின்றதே! ஐயோ முல்லை நாடே, உன்கதி இப்படியா ஆகவேண்டும்! வீரத்தமிழ்ப் பரம்பரை மன்னர்களால் திக்கெட்டும் புகழ் மணம் வீச அரசோச்சிய இம் முல்லை நாட்டிற்கா இக்கதி ஏற்படவேண்டும்! எங்கு நோக்கினும் சதி—சூது—வாது மூடநம்பிக்கைகள்—மதவெறி இவைகள் சூழப்பட்டுள்ள இந் நாட்டின் எதிர்கால நிலையை எண்ணிப்பார்க்கவே, பயமாக வன்றோ இருக்கின்றது!

அரு: காஞ்சனா........அஞ்சாதே. அந்த வீணர்களின் கொட்டமடங்கும் நாள் வெகு சீக்கிரத்திலேயே நெருங்கிவிட்டது. ஆபத்திற்கு அச்சாரம் தந்துவிட்டார்கள் அறிவிலிகள்! சாம்ராஜ்யப் பதவிக்கு ஆசைப்பட்டு சாவை வரவழைத்துக் கொள்ளப்போகும் அம்மூடர்களின் கொட்டம் அடங்கும் நாள் சீக்கிரமே நெருங்கிவிட்டது! மக்கள் சுழன்றமக்கும் சூறுவளி! கம்பீரமாகக் காற்றில் பறக்கும் காற்றாடி அச் சூறுவளியில் சிக்கினால் என்னவாகும் மென்பதை அறிய இது ஒரு நல்ல சந்தர்ப்பம் அக் கயவர்களுக்கு!

தி: அருணரே, இனி ஆகவேண்டியதைப் பற்றிக் கவனிப்போம்! நீர் மேற்கொண்டு என்ன செய்வதாக உத்தேசம்?

அரு: முதலில் என் தந்தை மறைந்துகொள்ளவேண்டும் சிலகாலம் வரை! அதாவது அரசரது கொலையைப் பற்றிய உண்மையை நாம் கண்டுபிடிக்கும் வரை!

காஞ்: அதுதான் சரி......!

தி: தாங்களதை உடனடியாய்க் கவனியுங்கள்.

அரு: சரி நான் வருகிறேன் நீங்களிருவரும் ஜாக்ரதையாய் இருங்கள்.

காஞ், தி: அதைப்பற்றிக் கவலையே வேண்டாம்!

[அருணன் போகின்றான்]

அங்கம்: 21

இடம்: அருணனின் வீடு [அருணன், சிங்காரவேலர்],

சிங்: அதைப்பற்றிக் கவலையே வேண்டாம்! நான் எப்படியாவது தப்பித்துக் கொள்வேன். சொன்னால் ஆச்சரியமடைவாய் ...ஆனால் இது ஏனோ எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

அரு: எதைக் குறிப்பிடுகின்றீர்களப்பா?

சிங்: நல்ல மனிதர்கள் என்போர் சட்டங்களுக்கும், சூதுக்களுக்கும் பயந்து கீழ்ப்படிந்து நடக்கக் கூடாது என்ற உண்மையை அலசிப் பார்க்கும்போது நான் வீணாக வீணர்களுக்குப் பயந்து ஒளிந்து கொள்வது என்பது அவ்வளவு மேன்மையல்ல என்பதைத்தான் குறிப்பிடுகின்றேன்!

அரு: அப்பா......தாங்கள் உலகத்தை உணர்ந்தவர்கள், உங்களுக்குத் தெரியாததொன்றில்லை...இருப்பினும் என்னபிப்பிராயத்தைச் சொலகிறேன்... அப்பா...மகத்தான வெற்றியை நாம் அடையவேண்டுமானால் மகத்தான ஆபத்துக்களை நாம் கடந்துதான் தீரவேண்டும். மேலும் அயோக்கியத் தனமும், அளவுமீறிய அதிகாரபோதையும், சூது—சூழ்ச்சியும் நிரம்பிய நிதும்பர்களை அரசியல் சட்ட திட்டங்கள் வகுக்கும் விவேகிகள் என்று கொள்ளப்பட்டுள்ள இந்த நாட்டில் நிச்சயமாய் உண்மையைக் காணமுடியாது என்பதைத் தெரிந்துதான் நான் உங்களைச்சிலகாலம் மறைந்திருக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்!

சிங்: ஆம். அருணா நீசொல்வது முற்றிலும் உண்மை! கலங்கியுள்ள நீரில் நம் முகம் சரியாகத் தெரியாதுதான், அதுபோலவே ஒழுக்கமில்லா ஆட்சியில்—உண்மையைக் காணமுடியாததுதான். அருணா நான் உன்னைப் பெற்றெடுத்ததின் பெருமகிழ்வை எப்படி உரைப்பதென்றே விளங்கவில்லை. செல்வமே, உன்னைப் போன்று ஒவ்வொரு வாலிபனும் சுதந்திர தாகம் உடையவனாக மாறிவிட்டால் இந்நாடு எல்லையில்லா இன்பம் எய்த ஏது தடை? நீ புகழுக்காகவோ—பொருளுக்காகவோ — கௌரவத்திற்காகவோ உன்உயிரைப் பணயம்வைத்து உழைக்கவில்லை. தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கும், முல்லைநாட்டு மக்களுக்கும் தொல்லை தருவதையே தொழிலாகக் கொண்ட தொந்தி நாதர்களின் பிடியிலிருந்து மக்கள் விடுபடவன்றோ நீ உழைக்கின்றாய். மைந்தா உன் முயற்சி வீண் போகாது. நிச்சயம் வெற்றி பெறுவாய். ஹூம்...ஆலவாயுன் தன் குதர்க்க புத்தியால் எதையும் சாதித்துவிடமுடியும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டான் முட்டாள்!

அரு: பாமர ஜனங்களின் சக்தியைப் பரிபூரணமாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள் நீறு பூத்த நெருப்பு—உலவும் எரிமலை—குமுறும்கடல் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை நாளுக்கு நாள் மக்களைக் கசக்கிப்பிழிந்து அவர்களை சக்கையாக்கி விட்டால் பின்பு சாரம்எப்படிக் கிடைக்கும் என்ற சிறு உண்மையைக் கூட அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை என்பதை எண்ணுந்தோறும் எனக்கு அதிக ஆச்சரியமாயிருக்கின்றது. பாமர மக்கள் என்று யாரைநாம் எண்ணிக் கொண்டிருக்கின்றோமோ அவர்களிடம் உள்ளசக்தியின் அனலை அறியாமை என்னும் நீறு பூத்துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் யாரையும் முதலில் நம்பித்தான் விடுவார்கள். ஆனால் அவர்களின் சக்தியின்மேல் மூடியுள்ள அறியாமைச்சாம்பலைப்பகுத்தறிவெனும் காற்றினால் பறந்துபோகச் செய்து விட்டால் அவர்கள் இப் பாரையே குலுக்கிவிடுவார்கள்! இதை அந்த மூர்க்கன் உணராதது, ஒரு வகையில் நல்லதே. அக்ரமம்! சாகாவரம் பெற்றதல்ல. அதுபோலவே அது நீடித்து நிற்கக் கூடியதுமல்ல! உளுத்துப்போன தூண்களையுடைய பாழடைந்த மண்டபம் அது! மக்களின் சுதந்திர ஆவேச மூச்சுகளால் ஏற்படும் சூறாவளிக் காற்றினால், அது, இன்றைக் கில்லாவிட்டாலும் பிறிதோர் நாள் கட்டாயம் இடிந்து விழுந்தேதான் தீரும்!

சிங்: ஆம் அருணா உன் பேச்சுகள் பொன்னேட்டில் பொறிக்கத் தகுந்தவைகள்! ஹூம்....மடையன். என்னைச் சிறையிலிடச் சதிசெய்கின்றான். அறிவிலி. இந்த உடலைத்தான் அவன் சிறையிலிடலாம். ஆனால் உள்ளத்தை இடமுடியுமா? அதிகார வர்க்கமே உன் அஸ்தமிக்கும் அதிகாரத்தால் என்னை வெளிச்சமும், ஆரோக்கியமும், சௌகரியமுமில்லாத சிறையிலே விலங்கைப்போல் அடைத்துப் போட்டு சித்திரவதை செய்யலாம். ஆனால் அதனால் உன் எண்ணம் ஈடேறிவிடும் என்று கனவு காணாதே! சரி அருணா உன் விருப்பப்படியே நான் மறைந்திருக்கின்றேன். எங்கே தெரியுமா?

அரு: [ஆவலுடன்] எங்கேயப்பா?

சிங்: காளிகோயில் கர்ப்பக்கிருகத்துக்குப் பின்னால் உள்ள சுரங்கத்தில்....!

அரு: என்ன........காளி கோயிலில் சுரங்கமா?

சிங்: ஆம் சுரங்கம்தான். இறந்துபோன அரசர் ஒருமுறை அந்த இடத்திற்கு அழைத்துப் போனார், அவ்விஷயம் இதுவரை எவருக்குமே தெரியாது? அவ்விதம் நான் அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தேன். அதாவது அவரது உயிருள்ளவரை அந்த இடத்தைப் பற்றிய இரகசியத்தை

(13-ம் தொடர்ச்சி)

தைப் பார்க்கிருள். அவனது அதரத் துடிப்பை நோக்குகிருள். அவன் கண்ணின் ஒளியைப் பார்க்கிருள். அந்தக் கண்ணின் மணியில் தன் உருவையும் காண்கிருள். உள்ளத்தை உறுதிப் படுத்துகிருள். உள்ள உறுதியுடன் நீதிபதியை நோக்குகிருள. வார்த்தைகள் வருகின்றன உதட்டிற்குள்ளேயே.

நீ. பதி: ஏன் தயக்கம்?

செ. மணி: ஆம்! உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும்! இதோ நிற்கும் இந்த ஆறுமுகம் திருடன் தான்!

வழக்கு மன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஆறுமுகம், எந்தஒரு அன்பின் உரு தனக்கு ஆதரவு தரும் என்று எண்ணினுனே அதே உருவம் தன்னைத் தூக்குக் கயிறு முன் நிறுத்தினல், என் செய்வான்? அவன் தலை சுற்றியது. சுற்றிய தலை கூண்டின் மரப்பிடியில் மோதுகிறது. ஒரே ஆரவாரம். அமைதி நிலவ சிறிது நேரம். மறுபடியும் வழக்கு ஆரம்பமாகிறது.

நீ. பதி: திருடியதின் விபரத்தைக் கூறு.

செ. மணி: சொல்லுகிறேன் கேளுங்கள்! நன்ருகக் கவனித்துக் கேளுங்கள்! திருட்டு நடத்ததாகக் கூறப்படும் தினத்தில், நானும் ஆறுமுகமும் அப்பாவின் அறையில் இருந்தோம். அப்பொழுது நாங்கள் ஒரு கட்டு வார இதழ்களுடன் அங்கு இருந்தோம். ஏனென்ருல் ஒரு தொடர் கதையைப் படிக்க நானும் ஆறுமுகமும் பல்வேறு பொருள்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.........

நீ. பதி: (குறுக்கிட்டு) என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள் என்று கூறமுடியுமா?

செ. மணி: எங்கள் பேச்சுக்கும், இந்த வழக்குக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. எனவே அது பற்றி இங்கு சொல்லத் தேவையில்லை.

நீ. பதி: சரி, மேலே கூறு.

செ. மணி: அப்பொழுது, ஆறுமுகம் அங்கு திறந்துகிடந்த அலமாரியைச் சுட்டிக் காட்டி, அந்த நகைகள் ஏது என்ருன். அப்பா வந்துவிட்டார். அவர், எங்களிருவரை—திறக்கப்பட்டிருக்கும் அலமாரியை—அதிலுள்ள அம்மனது ஆபரணங்களைக்கண்டார். அவரது கண்கள் கனல் கக்கிற்று. உடல் ஆடிற்று. அந்த அணிகளை மட்டும் கட்டிக்கொடுத்து அட்டிசொல்லாது பெட்டியில் கொண்டுபோய் வை என்ருர். மற்றைய சில நகைகள் ஆறுமுகத்தின் கையில் ஏறின. அப்பா 'திருடன்! திருடன்!' எனக் கூச்சலிட்டார். ஊர் கூடிற்று. போலீசார் வசமானுன் ஆறுமும். அவன் சிறைவந்தான் எல்லோரும் திருடன் என்கிருர்கள். ஆனல் அவன் அந்தப் பொருள்களைத் திருடவே இல்லை.

நீ. பதி: ஆறுமுகம் திருடன் தான் என்று நீயே சாட்சி கூறினுயே சற்று முன்பு?

செ, மணி: ஆம்! அவன் திருடன்தான். ஆனல் அவன் திருடியது இந்தத் தங்கம் வெள்ளி நகைகளை அல்ல.

நீ. பதி; வேறு எதைத் திருடினுன்?

செல்லமணி: (தலை தரையைப் பார்க்க, முகம் நிலத்தை நோக்க) அந்தத் திருடன் திருடியது, பக்தர்களும், சித்தர்களும, துறவிகளும் வெறுக்க வேண்டிய முப்பொருள்களில் மண்ணையும் பொன்னையும் தவிர மற்றயதை.

நீ. பதி: திருடநீயும் உடந்தையாக இருந்தாயா?

செ. மணி: ஆ......ம்!

எங்கிருந்தோ 'விடுதலை! விடுதலை!! விடுதலை!!!' என்ற கீதம் காறறைப் பிளந்து கொண்டு வந்தது. மக்கள் எல்லோரும் 'யார் திருடன்? திருடன் யார்?' என்றனர். வழக்கு மன்றம், வம்புச் சமூகம், வலிமையற்ற வைதீகம் இவைகளை விட்டு காதற் பறவைகள் விடுதலை அடைந்தன.

---

திலோத்தமா.......

எவரிடமும் உரைப்பதில்லையென்று. இப்போது அவர் இறந்து விட்டதால் இதை உனக்குச் சொல்ல நேர்ந்தது வா, நாம் போகலாம் உனக்கு அந்த இடத்தின் இரகசியத்தைக் காட்டுகின்றேன் [இருவரும் போகத் திரும்புகின்றனர் —போர்வீரர்கள் வரும் காலடிச் சத்தம் கேட்கின்றது]

அரு: அப்பா........கருநாகனும், அவனது காலிகளும் நம்மைப் பிடிக்க வருகிருர்கள் வாருங்கள் இந்த வழியாகப் போய்விடலாம்....

[பின் பக்க வழியாகத் தப்பித்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் சென்றதும் கருநாகனும் அவனது ஆட்களும் அறைக்குள் நுழைகின்றனர். அங்கு யாரையும் காணுது போகவே ஆத்திரமேலிட்டு அங்கிருந்த சிலைகளைக் கருநாகன் உடைக்கின்ருன். பின்பு......]

கரு; ஆஹா, குருவிகள் பறந்துவிட்டன!

[அருணன், தயாளன் வேடத்தில் வருகிருன்]

தயா: பறந்து போனு போவட்டுமே பிரபு! பின்னலே வலை போட்டு புடிச்சிகிட்டா போவுது. அதுவும் முடியாம போனு வில்லாலே அடிச்சி வீழ்த்திட்டா போவுது...ஓ.... உங்களுக்கு வில்லு புடிக்கவே தெரியாதல்ல....மறந்தேபோயிட்டேன்! மன்னிக்கணும் — மன்னிக்கணும்!

கரு: [கோபமாக] சட்முட்டாளே! இதுவரை எங்கேயடா போயிருந்தாய்? அறிவுகெட்டவனே, ஆகாயத்திலே அந்தமாளிகை கட்டுவதிலே நீ பெரிய சூரப்புலின்னு எனக்குத் தெரியும், சும்மாகிடடா சோற்றுத் துருத்தி!

[குழப்பமுடன் உலவுகிருன். பின்பு...]

ஹூம்....ஏதோ சொத்து நிறைய இருக்குதே இத்தை வச்சிக்கிட்டு ஒருத்தர் ஜோலிக்கும் போகாம சௌக்கியமா வாழ்க்கையை நடத்துவோமின்னு இலலாம இந்த ராஜகுரு என்னடான்னு நம்ம உசிரை வாங்கிகிட்டிருக்கிருரே! இத்தை யாரண்டை சொல்லி அழறது! இந்த பயித்தியக்கார ஜனங்க தான் எப்பவும் அந்த பரதேசிப் பனுதிங்களைத தலை மேலே தூக்கிவைச்சிகிட்டு ஆடுதே......

(6-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Neo. Printers 147, Coral Merc[illegible]nt St., Madras. Joint Editor. M. Ilancheliyan B. A.(Hon)